1970 மார்ச் 12]

திரு. இல. பலராமன் : இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் இந்தக் கல்வி மானியத்திற்காக எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறது? அது நல்ல முறையில் பயன் படுத்தப்படுகிறதா என்ற விவரங்களை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிடைக்கக்கூடிய எந்தத் தொகையையும் நல்லமுறையில்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் எவ்வளவு தொகை கிடைக்கிறது என்ற விவரம் இல்லை.

பனையப்பட்டிக்கு பேருந்து நிலையம்

*** 343 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பனையப்பட்டியில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) பனையப்பட்டி பஞ்சாயத்து அவ்வூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்காக ரூ. 21,700 அரசினரிடம் கடன்கேட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளருக்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளதாக, மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார். அந்த செயற்குறிப்பு கிராம நல இயங்குநர் வழியாக அரசினருக்கு வந்தவுடன் கடன் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனையப்பட்டியில் பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமாக மாவட்டத் தலைமையிடம் மீண்டும் கேட்டு விரைவில் அமைத்துத்தர அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : புதுக்கோட்டை உதவி ஆட்சியாளர் கடன் கோரிக்கையை மாவட்ட ஆட்சியாளரின் வழியாக அரசுக்கு அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்தது. மேற்கண்ட கடன் கோரிக்கை இந்தத் துறைக்கு வந்து சேர்ந்ததும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதுக்கோட்டைப் பகுதியை மேம்படுத்த நிதி ஒதுக்கம்

*** 344 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டார வளர்ச்சித் திட்டம் (Area Development Scheme) என்பதின் கீழ் மிகவும் பிற்பட்ட புதுக்கோட்டைப் பகுதிக்கு அரசு, கூடுதல் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1968-69, 1969-70ல் ஏதேனும் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா ?